பல்லாவரம் தெற்கு பகுதி திமுக சார்பாக குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலையில் அமைந்துள்ள கலைஞர் திடலில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் கழகப் பொருளாளர் திமுக நாடாளுமன்ற குழு தலைவர் டி. ஆர். பாலு. காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழக செயல்வீரர்கள் தேர்தல் பணி ஆற்றுவது குறித்து சிறப்புரை ஆற்றினார்கள். பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் வரவேற்றுப் பேசினார். இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி தாம்பரம் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். ஆர். ராஜா துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், ஏ.கே. கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

புல்லட் ரயிலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பயணம்!

டோக்கியோ, மே.29-

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜப்பான் சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு புல்லட் ரயிலில் பயணம் மேற்கொண்டார். தனது புல்லட் ரயில் பயணம் குறித்த தகவலை தனது ட்விட்டர் பதிவில் மகிழ்வுடன் பகிர்ந்துள்ளார்.

ஒசாகா நகரிலிருந்து டோக்கியோவுக்கு புல்லட் ரயிலில் பயணம் செய்வதாகவும், ஏறக்குறைய 500 கி.மீ. தூர பயணத்தை இரண்டரை மணி நேரத்தில் கடந்து விடும் என அவர் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் என்றாலே சர்வதேச அளவில் மிகவும் பிரபலமானது புல்லட் ரயில்தான். அதிவேகமான இந்த ரயில் சேவை, பயண நேரத்தை பெருமளவு குறைக்கிறது. இதனால் தினசரி அலுவல் பயணத்திற்குக் கூட அங்கு புல்லட் ரயிலை பயன்படுத்துகின்றனர்.

உருவ அமைப்பில் மட்டுமல்லாமல் வேகத்திலும், தரத்திலும் புல்லட் ரயில்களுக்கு இணையான ரயில் சேவை நமது இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வர வேண்டும். ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயனடைந்து அவர்களது பயணங்கள் எளிதாக வேண்டும்.

இவ்வாறு தனது விருப்பத்தை முதல்வர் அவர்கள் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் 2017-ஆம் ஆண்டு புல்லட் ரயில் சேவை தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மும்பை - அகமதாபாத் இடையே புல்லட் ரயில் சேவைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மும்பை அகமதாபாத் இடையிலான தூரம் 508 கி.மீ. ஆகும். இந்தத் திட்டத்துக்கான மொத்த மதிப்பு ரூ.1,08,000 கோடியாகும். 6 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இத்திட்டத்தில் இதுவரை 30 சதவிகித பணிகள்தான் முடிவடைந்துள்ளன.

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவைகள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தனர்!

திருப்பூர், மே.29-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (28.05.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மற்றும் மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவைகளை துவக்கி வைத்தார்கள்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.27.14 கோடி மதிப்பீட்டில் 27 அறிவிப்புகளின் மூலம், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 500 மருத்துவமனைகள் திறந்து வைக்கவுள்ளார்கள். அதில் திருப்பூர் மாவட்டத்தில் 39 மருத்துவமனைகள் மக்கள் பயன்பாட்டிற்கு வரஇருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்து 25 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 25 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களையும் ஒரே நேரத்தில் கேட்டு பெற்றுத்தந்தார்கள். அதில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் படியூர் ஊரக ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் குளத்துபாளையம் நகர்புற ஆரம்ப சுகாதாரநிலையம் அமைக்க அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தின் தேவையினை அறிந்து 2 கூடுதல் மருத்துவமனையினை தந்திருக்கிறார்கள். நமக்கு நாமே திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் 48, கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் போன்று ஏராளமான திட்டங்களின் மூலம் அதிகமான சேவைகள் செய்யப்பட்டு வருகிறது.

செவிலியர் பயிற்சிக் கல்லூரி!

திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் புதிய துணை சுகாதார நிலையங்கள், ஆரம்பசுகாதார நிலையங்கள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளை எல்லாம் மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.98.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் மருத்துவகட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இவ்வளவு பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திருப்பூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி கல்லூரி அமைய வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்கள். ஒன்றிய அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரைச் சந்தித்து கோரிக்கை வைத்தன் அடிப்படையில் 11 இடங்களில் புதிதாக செவிலியர் பயிற்சி கல்லூரி அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். 11 இடங்களில் முதல் இடமாக 100 மாணவர்களுடன் திருப்பூர் மாவட்டத்தில் ரூ.10.00 கோடி நிதியுதவியுடன் செவிலியர் பயிற்சி கல்லூரி அமைய இருக்கிறது.

ரூ.52.92 இலட்சம் மதிப்பீட்டில் மகப்பேறு தீவிர சிகிச்சை பிரிவு, ரூ.19.05 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு உயிர் காக்கும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள், திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தாராபுரம் அரசு மருத்துவமனை, உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை, ரூ.2.61 இலட்சம் மதிப்பீட்டில் தாய்ப்பால் வங்கிகளுக்கு நவீன மருத்துவ உபகரணங்கள், ரூ.12.92 இலட்சம் மதிப்பீட்டில் மகப்பேறு அறை திருப்பூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தாராபுரம் அரசு மருத்துவமனை உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை, பெருமாநல்லூர் சமுதாய சுகாதார நிலையம், ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனை புதியகட்டிடமும், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்ட சித்தமருத்துவமனை தரம் உயர்த்தல் பணிகளும்,

சுகாதார மேம்பாடு!

ஆரம்ப சுகாதார நிலைங்களில் ரூ.27.08 இலட்சம் செலவில் சுகாதார மேம்பாடு மற்றும் மேலாண்மை நடவடிக்கைக்காக ஊராட்சி மன்றதலைவர் மற்றும் கிராம சுகாதார செவிலியர்/ இடைநிலை செவிலியர்கள் ஆகியோர் உள்ளடங்கிய "மக்கள் நலவாழ்வுகுழு", அனைத்து துணை சுகாதார நிலையங்களில் 48 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.80.54 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள், ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் 18 புதிய துணை சுகாதார நிலைய கட்டிடங்களும்,

நாலூர் மற்றும் கே.வி.நகரில் 12 வகையான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்க நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ரூ.2.40 கோடி செலவில் புதிய கட்டிடம், அண்ணா நெசவாளர் காலனி, டி.எஸ். கே, சுண்டமேடு ஆகிய இடங்களில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடங்கள், 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.9.07 இலட்சம் பேறு காலத்திற்கு பின் ஏற்படும் இரத்தப் போக்கிற்கான சிகிச்சைக்கு நவீன உபகரணங்களும்,

அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளுக்கு ரூ.13.44 இலட்சம் மதிப்பீட்டில் "இரத்தசோகை இல்லா தமிழ்நாடு" எனும் இலக்கை எய்திடும் வகையில் 6 வயது முதல் 18 வயது உள்ளடக்கிய குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு இரத்த சோகையை கண்டறிய 28 ஹீமோகுளோபினோ மீட்டர் கருவிகள் வழங்கப்படும்.

நடமாடும் சித்த மருந்தகம்!

242 துணை சுகாதார நிலையங்கள் ரூ.5.55 இலட்சம் மதிப்பீட்டில் சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை, ரூ.9.42 இலட்சம் மதிப்பீட்டில் எரிசினம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடமாடும் சித்த மருந்தகம் தொடங்கப்படும். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.26.31 இலட்சம் மதிப்பீட்டில் கண்காணிப்புகேமராக்களும், (CCTV),

திருப்பூர் மாவட்டம் முழுவதும் ரூ.62.5 இலட்சம் மதிப்பீட்டில் அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகள், ரூ.4.63 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அவசிய ஆய்வகங்களுக்கு வேதிப்பொருட்கள் மற்றும் ஆய்வகநுகர் பொருட்கள், ரூ.8.86 இலட்சம் மதிப்பீட்டில் இருதய பாதுகாப்பு மருந்துகள், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புற்று நோய்க்கான கீமோதெரபி மருந்துகள், ரூ.7.52இலட்சம் மதிப்பீட்டில் சுய இரத்த சுத்திகரிப்புக்கான CAPD Bags, ரூ.12.5 இலட்சம் மதிப்பீட்டில போதை மீட்பு மற்றும் புனர் வாழ்வு சேவைகள், ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் மற்றும் உயிர்காக்கும் உயர்ரக மருந்துகள், ரூ.52.63 இலட்சம் மதிப்பீட்டில் காச நோய் பரிசோதனைக்கான நுகர் பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் அரசுமருத்துவக் கல்லூரி 9,82,576 சதுரடியில் 27.88 ஏக்கர் பரப்பளவில் ரூ.195 கோடி ஒன்றிய அரசு நிதியும், ரூ.130 கோடி மாநில அரசுநிதியும், ரூ.16.35 கோடி மாநில அரசு கூடுதல் நிதியும் என மொத்தம் ரூ.341.35 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டு இளங்கலை மருத்துவபடிப்பு இடங்கள் 100, 7.5% ஒதுக்கீடு 6, மாநில ஒதுக்கீடு 79, 15% அனைத்திந்திய ஒதுக்கீடு 15, ஆங்கில வழிக்கல்வி மாணவர்கள் 93, தமிழ் வழிக்கல்வி மாணவர்கள் 2, இந்தி வழிக்கல்வி மாணவர்கள் 5, தமிழக மாணவர்கள் 85, இதர மாநில மாணவர்கள் 15.

1170 மொத்த படுக்கை வசதிகள், இதில் 500 புதிய படுக்கைகள், மொத்த பிரிவுகள் 2, நாள் ஒன்றுக்கு 700 மொத்த உள்நோயாளிகள், நாள் ஒன்றுக்கு 2700, மொத்த புறநோயாளிகள் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

2019 ஆம் வருடத்தித்தில் நாளொன்றுக்கு 2250 புறநோயளிகள் வீதம் 8,21,190 புறநோயாளிகளுக்கும், நாளொன்றுக்கு 125 உள்நோயாளிகள் வீதம் 44,993 உள்நோயாளிகளுக்கும், 2022- ஆம் வருடத்திற்கு நாளொன்றுக்கு 2493 புறநோயாளிகள் வீதம் 9,09,970 புறநோயாளிகளுக்கும், நாளொன்றுக்கு 151 உள்நோயாளிகள் வீதம் 54,992 உள்நோயாளிகளுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது.

2021-22 மானியக் கோரிக்கையில் 35 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், 18 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 139 அரசு எமருத்துவமனைகளுக்கு பன்முக உயர்தர தீவிரசிகிச்சை பிரிவுகள், 2099 படுக்கைகள் ரூ.364.22 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.04.2022 அன்று சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் 341 துணை சுகாதார நிலையம், 67 ஆரம்ப சுகாதார நிலையம், 2 வட்டம் சாரா மருத்துவமனை, 7 வட்டார மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி மருத்துவமனை 1 என மருத்துவ கட்டமைப்புகள் உள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின் படி 708 நகர்ப் புற நலவாழ்வு மையத்தில் திருப்பூர் மாவட்டத்தில் 39 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும், திருப்பூர் மாநகராட்சி 34 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும், தாராபுரம் நகராட்சியில் 1 நகர்ப்புற நலவாழ்வு மையமும், உடுமலைப்பேட்டை நகராட்சியில் 1 நகர்ப்புற நலவாழ்வு மையமும், பல்லடம் நகராட்சியில் 1 நகர்ப்புற நலவாழ்வு மையமும், அவிநாசி நகராட்சியில் 1 நகர்ப்புற நலவாழ்வு மையமும், திருமுருகன்பூட்டி நகராட்சியில் 1 நகர்ப்புற நலவாழ்வு மையமும் என ரூ.9.75 கோடிசெலவில் கட்டிட பணிகள் நடைபெற்று வருகின்றன.

தரம் உயர்த்தப்பட்ட கூடுதல் கட்டிங்கள்!

திருப்பூர் மாவட்டத்தில் ரூ.39.86 கோடி மதிப்பீட்டில் 3 தளங்களுடன் வேலம்பாளையம் அரசுமருத்துவமனை புதிய கட்டிடம், ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் தாராபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம், ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட காங்கேயம் மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் கூடுதல் கட்டிடம் ரூ.5.15 கோடி மதிப்பீட்டில் அவினாசி அரசுமருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல பிரிவு கட்டிடம், ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் உடுமலைப்பேட்டை அரசுமருத்துவமனையில் 2 தளங்களுடன் கூடுதல் கட்டிடம் அமைக்கப்பட்டு வருகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கனியூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பெருமாநல்லூர் வட்டார பொதுசுகாதார அலகு கட்டிடம், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளகோவில் வட்டார பொது சுகாதார அலகுகட்டிடம், ரூ.22.75 இலட்சம் மதிப்பிட்டில் செம்மிபாளையம் செவிலியர் குடியிருப்பு கட்டிடம் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் பொதுசுகாதார ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் வேளம்பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் பல்லடம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பிஆர்எம் ஹோம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தல், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் வீரபாண்டி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தல், ரூ.16 இலட்சம் மதிப்பிட்டில் மேட்டுப்பாளையத்தில் கூடுதல் கட்டிடம், ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் நெசவாளர் காலனியில் கூடுதல் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தாலா ரூ.30 இலட்சம் மதிப்பீட்டு வீதம் வரப்பாளையம், அந்தியூர், கோவில் மேடு, நாரணபுரம், பள்ளபாளையம், எலவந்தி, கெங்கநாயக்கன்பாளையம், கீத்தனூர், வடமலைபாளையம், கோல்டன்பேட்டை என மொத்தம் ரூ. 98.87 கோடி மதிப்பீட்டில் 26 துணை சுகாதார நிலையங்களில் மருத்துவ கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரூ.60 கோடி செலவில் திருப்பூர் ரோட்டரி, பொது நலஅறக்கட்டளை மற்றும் அரசின் நமக்கு நாமே திட்டம் இணைந்து புதிய புற்றுநோய் மைய கட்டிடம் கட்டுவதற்கான இடம் பார்வையிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு 500 புதிய படுக்கை வசதிகளுடன் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேச்சு!

இதில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாகவும், காங்கேயம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட்டதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சேவைகளை துவக்கி வைக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற போது கொரேனா வைரஸ் தொற்று நோய் தமிழகத்தில் அதிகப்படியாக சூழ்நிலை இருந்தது. உலகம் முழுவதும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நெருக்கடியான கால கட்டத்தில் அரசு பொறுப்பேற்றது. அப்பொழுது நாங்கள் எல்லாம் அமைச்சராக பொறுப்பேற்றதும் எங்களை எல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவரவர் மாவட்டத்திற்கு சென்று கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

அந்த வகையில், அந்த தந்த மாவட்டத்தில் நாங்கள் ஆலோசனை நடத்தி ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு கூடுதலாக படுக்கை வசதி மற்றும் பணியாளர் நியமனங்கள் செய்து, மேலும் ஊரடங்கு உத்தரவு போன்ற நடவடிக்கைகள் மூலம் கொரோனாவை கட்டுக்குள் கொண்டு வர முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டார்கள். அரசு பொறுப்பேற்றதிலிருந்து கொரனோவை கட்டுக்குள் கொண்டு வர 8 மாத காலம் தேவைப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை பல்வேறு சூழ்நிலையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

மருத்துவ குழுக்கள்!

மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு 4-வது முறையாக பொறுப்பேற்ற போது வருமுன் காப்போம் திட்டத்தை கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவமனையில் மட்டுமே மருந்துவர்கள் பணிபுரிவதோடு அல்லாமல் கிராமப்புறங்களுக்கு சென்று வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்ல முடியாதவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் சிறப்பாக பயன்பட்டு வருகிறது. நோய் ஆரம்ப கட்டத்தில் சரி செய்வதால் தான் இது வருமுன் காப்போம் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தை நல மருத்துவர் உள்ளிட்ட 15 பேர் குழு கொண்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு சிறந்த திட்டமாக உள்ளது.

இந்த மருத்துவமுகாமில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் சர்க்கரை நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களில் பாதிக்கக்கட்டவர்கிளன் இல்லத்திற்கே சென்று மருத்துவர் மற்றும் செவிலியர் ஆகியோர் சிகிச்சை அளிக்கின்றனர். மேலும், படுத்த படுக்கையில் உள்ள நோயாளிகளுக்கு மற்றும் இயன்முறை மருத்துவம் நோய்த் தடுப்பு பராமரிப்பு செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவ சிகிச்சையாளர் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 என்ற திட்டத்தினை செங்கல்பட்டு மாவட்டத்தில் துவக்கி வைத்தார்கள். அந்த வகையில் சாலை விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுக்கும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வகுக்கப்பட்ட உன்னத திட்டம் இன்னுயிர் காப்போம் திட்டம். விபத்து நடந்த உடன் எவ்வித தாமதம் இல்லாமல் விபத்தில் சிக்கியவரை சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதும் அவர்களுக்கு உடனடி சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சாலை விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு முதல் 48 மணிநேரத்தை முக்கியமாக கருதி இத்திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

முன்னதாக, திருப்பூர் அரசு மருத்துவக்கல்வி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மற்றும் பொது மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள அனுமதி அட்டைகளை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் அவர்கள் புற்று நோய் மருத்துவமனை கட்டுவதற்காக ரூ.10. இலட்சம், மதன் பவன்டேசன் ரூ.5 இலட்சம், கிரின்வேஸ் கிளாத்திங் ரூ.5 இலட்சம், ரோட்டரி கவர்னர் திரு.இளங்குமரன் ரூ.5 இலட்சம் நிதியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் வழங்கினார்கள்.

பின்னர், புற்றுநோய் மருத்துவமனை கட்டுவதற்கான இடத்தினை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், இயக்குநர் (மருத்துவ கல்வித்துறை, சென்னை) மரு.ஆர்.சாந்திமலர், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயனண், மாநகர துணை காவல் ஆணையர் அபிசேக் குப்தா, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஆர். முருகேசன், தலைமைப் பொறியாளர், பொறிஞர் இரா. இளஞ்செழியன், (கோவை மண்டலம்) திருப்பூர் மாநகராட்சி மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் (4-ஆம் மண்டலம்), கோவிந்தசாமி (3-ஆம் மண்டலம்), கோவிந்தராஜ் (2-ஆம் மண்டலம்), திருமதி. உமா மகேஸ்வரி (1-ஆம் மண்டலம்), மாமன்ற உறுப்பினர்/ சுகாதார குழுத்தலைவர் திருமதி.கவிதா நேதாஜி கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் இளைஞர் அணி திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஒன்றிய செயலாளர் கோடுவேளி தங்கம் முரளி தலைமையில் முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் கோடுவெளி எம்.குமார் ஏற்பாட்டில் காரணி கிராமத்தில் நடைபெற்றது இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். அருகில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ கழக பேச்சாளர் சே. மெ.மதிவதனி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ஜி.விமல்வர்ஷன், ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா குமார், நிர்வாகிகள் பி.ஜி.முனுசாமி, கே.ஜெ.அன்பு, கே.என்.சரத்குமார், இ.சுப்பிரமணி, வி.நாகலிங்கம், உமா சீனிவாசன், ஆர்.லோகநாதன், வெங்கல் ஜி.பாஸ்கர், டி.பாஸ்கர்,எம்.சத்தியா, எஸ்.இளவழகன், எண்.கலாநிதி, பி.ஜி.எம்.நாகராஜ், புருஷோத்தமன், என்.அச்சுதன், வி.ஸ்ரீதர், எம்.நாராயணசாமி, ஏ.சுப்பிரமணி, எஸ்.ஆளவந்தான், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ.கே.எம்.சரத்குமார் உள்பட பலர் உள்ளனர்

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் 101 வது வட்டத்தில் திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை விளக்க தெரு முனைக் கூட்டம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.ஆர்.சதீஷ்குமார் தலை